இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

உள்ளத்தில் உறுதியற்றவர்களை நோக்கி, “திடன் கொள்ளுங்கள், அஞ்சாதிருங்கள்; இதோ, உங்கள் கடவுள் பழிதீர்க்க வருவார்; அநீதிக்குப் பழிவாங்கும் கடவுளாக வந்து உங்களை விடுவிப்பார்." அப்போது பார்வையற்றோரின் கண்கள் பார்க்கும்; காது கேளா தோரின் செவிகள் கேட்கும். அப்பொழுது, கால் ஊனமுற்றோர் மான்போல் துள்ளிக்குதிப்பர்; வாய்பேசாதோர் மகிழ்ந்து பாடுவர்; பாலைநிலத்தில் நீரூற்றுகள் பீறிட்டு எழும்; வறண்ட நிலத்தில் நீரோடைகள் பாய்ந்தோடும். கனல் கக்கும் மணல்பரப்பு நீர்த் தடாகம் ஆகும்; தாகமுற்ற தரை நீரூற்றுகளால் நிறைந்திருக்கும். (எசா 35: 4-7a )

# உண்மையும் நீதியும் வெல்ல வேண்டும்

## திருத்தந்தை வலியுறுத்து

முரண்பட்ட ஆற்றல்கள், கடினமான முள் போன்ற சூழல்கள் இருந்தாலும் உண்மையும் நீதியும் வெல்ல வேண்டும் என்றும், கடவுள் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒருபோதும் ஏமாற்றமடையாது என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஆகஸ்ட் 26 திங்கள்கிழமை வத்திக்கானின் கொன்சிஸ்தோரோ அறையில் பெய்ரூட் துறைமுக விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தார் ஏறக்குறைய 30 பேரைச் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறியபோது இவ்வாறு எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

லெபனோன் மக்கள் தனியாக இல்லை, அவர்கள் தனிமையை உணர அனுமதிக்க மாட்டோம் என்றும் செபம் மற்றும் உறுதியானப் பிறரன்புப் பணிகள் வழியாக ஒற்றுமையாக இருப்போம் என்றும் எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், போர் எப்போதும் தோல்விதான், அது அரசியல் தோல்வி, மனிதகுலத்தின் தோல்வி என்றும் கூறினார் திருத்தந்தை.

லெபனோனின் பெய்ரூட் துறைமுகத்தில் தீ விபத்து ஏற்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும், பொறுப்பு மற்று வெளிப்படைத்தன்மையை எடுத்துரைக்கும் வார்த்தைகள் மற்றும் செயல்களை வெளிப்படுத்தும் உரிமை



கொண்டவர்களாக இருக்கின்றார்கள் என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை.

பாலஸ்தீனம், இஸ்ரயேல் மற்றும் பிற இடங்களில் போரினால் எத்தனையோ அப்பாவி மக்கள் இறப்பதை துயரத்துடன் தான் பார்ப்பதாக எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், இப்பூவுலகில் மனிதர்கள் உருவாக்க கடினப்படும் அமைதியானது மத்திய கிழக்கு மற்றும் லெபனோன் பகுதி மக்களுக்கு விண்ணகத்திலிருந்து கிடைக்கப்பெற செபிப்பதாகவும் கூறினார்.

“லெபனோன் ஒரு செய்தி. அச்செய்தியானது அமைதிக்கான திட்டம்” என்று ஒரு திருத்தந்தை கூறியதை மறந்துவிடக்கூடாது என்றும், லெபனோனின் பணியானது பல்வேறு சமூகங்கள் ஒன்றிணைந்து வாழும் நிலமாகவும், பொது நலனை முன்வைத்து செயல்படுவதாகவும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார் திருத்தந்தை.

லெபனோனில் இருக்கும் கேதுரு மரத்தின் மாண்பு மற்றும் மேன்மையை போல, நம்பிக்கையின் மாண்பு, உன்னதமான எதிர்நோக்கு அம்மக்களிடம் இருப்பதைக் காண்கின்றேன் என்று எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், கேதுரு மரங்கள் நம்மை விண்ணகத்தை நோக்கிப் பார்க்க அழைப்பு விடுக்கின்றன என்றும், கடவுள் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒருபோதும் ஏமாற்றமடையாது என்றும் கூறினார் திருத்தந்தை.

2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4ஆம் தேதி லெபனான் நாட்டின் தலைநகர் பெய்ரூட் நகரின் துறைமுகத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய வெடி விபத்தினால், ஏறக்குறைய 6500 பேர் காயமடைந்தனர். 207 பேர் உயிரிழந்தனர்.

*மெரினா ராஜ் - வத்திக்கான்*

# கிள்ளானில் 'உடலின் இறையியல்' பயிலரங்கம் நடைபெற்றது

கிள்ளான்: புனித லூர்து அன்னை பங்கில் 'உடலின் இறையியல்' (*THEOLOGY OF BODY*) எனும் தலைப்பிலான இரண்டு நாள் பயிலரங்கம் கடந்த ஆகஸ்ட் 3 மற்றும் 4ஆம் தினங்களில் நடைபெற்றது. 3, 4, 5 ஆம் படிவம் மாணவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட இம்முகாம், அருட்சகோதரி ரீத்தா மற்றும் அவரின் குழுவினரால் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இளைஞர்கள் மத்தியில் இறை நம்பிக்கை வளர்ச்சியையும் அவர்கள் நல்ல கனித்தரும் வாழ்க்கையை வாழ்வதற்கு வழிகாட்டுதலும் இந்த இருநாள் பயிலரங்கத்தின் நோக்கமாக இருந்தது.

இரு நாள்களிலும காலை 9 மணிக்குத் தொடங்கிய இப்பயிலரங்கத்தில் உடலின் தெய்வீகத்தைக் குறித்த அறிவியல் கற்றுக் கொடுக்கப்பட்டது. உடலின் தெய்வீகத் தைப் பற்றிய அறிமுகம், மாணவர்களுக்கு அவர்களது உடல்களுக்கும் உறவுகளுக்கும் ஆன ஆழ்ந்த அர்த்தத்தை தூய ஆவிக்கண்கொண்டு மற்றும் ஒழுக்க நிலையான பார்வையில் புரிந்துகொள்ள உதவிவதாக இருந்தது.

நமது உடல் கடவுளின் கொடை என்பதால், அது கடவுளின் திட்டத்திற்கு ஏற்ப அன்பை வெளிப்படுத்துவதற்காக உருவாக் கப்பட்டது எனும் படிப்பினை வலியுறுத்



தப்பட்டது. இந்த படிப்பினையின் வழி மாணவர்கள் மற்றவர்களை மதிக்கக் கற்றுக்கொள்ளவும், ஆரோக்கியமான முடிவுகளை எடுக்கவும் முடியும் என்தடு, அன்பு மற்றும் உண்மையில் வேரூன்றிய உறவுகளை உருவாக்க முடியும் என்பதை அறிந்துகொண்டனர். உடலின் தெய்வீக அறிவியல் ஒருவரின் கண்ணியத்தை மற்றும் மற்றவர்களின் கண்ணியத்தை மதிக்கும் விதமாக வாழ்வது எப்படி என்பதற்கான விளக்கங்களையும் முன்வைத்தது

உடலின் இறையியல் என்பது வாழ்க் கையின் உடல் அல்லது வெளிப் புற அம்சங்களை மட்டுமே மையமாகக் கொண்டதல்ல. அது ஆழமான ஆன்மீக தொடர்புகளை பற்றி கவனம் செலுத்தும் வாழ்க்கை முறையை ஊக்குவிக்கிறது. இப்பயிலரங்கமானது கிறிஸ்தவ வாழ்க்கை முறைக்கு மாணவர்களை ஊக்குவிக்கும் சிறந்தொரு ஏற்பாடாக அமைந்தது.

**தெ ஹெரால்டு (The Herald) வார இதழ் தொடங்கப்பட்டு 30 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு, இவ்வரம் முதல் தமிழ்ப் பகுதி உட்பட அனைத்துப் பக்கங்களும் வண்ண்தில் வெளிவரும் என்பதை தெரிவிப்பதில் மகிழ்கிறோம்.**

# பிரிக்பீல்ட்ஸ், பாத்திமா அன்னை பங்கில் யூபிலி ஆண்டு 2025 சொற்பொழிவு நடைபெற்றது

கோலாலும்பூர்: இங்கு, பிரிக்பீல்ஸ் பாத்திமா அன்னை பங்கின் தமிழ்த் திருத்தூது பணிக்குழுவினர், கடந்த 20-ஆம் தேதி ஆகஸ்ட் மாதம் செவ்வாய்க் கிழமையன்று இப் பயிற்சியை ஏற்பாடு செய்திருந்தனர். தமிழ்நாடு, சிவகங்கை மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருள் முனைவர். இரா. மரிய டெல்லஸ் அவர்கள் இந்த அமர்வை சிறப்புற வழி நடத்தினார். 'நம்பிக்கைத் திருப் பயணிகள்' எனும் கருப்பொருளைத் தாங்கி வரும் யூபிலி ஆண்டு கி.பி 2025-இன் அறிமுகம் மற்றும் நோக்கம் பற்றிய விளக்கம் பங்கு மக்களுக்கு அளிக்கப்பட்டது.



கடவுளை நினைவு கூறவும், கடவுளோடு அவரின் திரு அவையோடும் கொண்டுள்ள உறவை புதுப்பித்துக் கொள்ளவும், கடவுளோடும் அவரின் மக்களோடும் உறவை மீண்டும் கட்டி எழுப்பவும் யூபிலி ஆண்டு நம்மை அழைக்கிறது என்பதை விவரித்தார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இயேசு பிறப்பின் 2025ஆம் ஆண்டிற்கான முன் தயாரிப்பாக 2024 ஆம் ஆண்டை இறைவேண்டல் தயாரிப்பு ஆண்டாக கடைபிடிக்க நம்மை அழைத்துள்ளார் என்றார்.

25 ஆண்டுகள் அல்லது 50 ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்படும் யூபிலி ஆண்டானது இம்முறை டிசம்பர் 24ஆம் தேதி 2024 தொடங்கி சனவரி 6ஆம் தேதி 2026-இல் நிறைவு பெறும். இப்பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு அருட்தந்தை பல விவிலிய வாசகங்களில் இருந்து விளக்கங்களை அளித்ததோடு, அதைச் சார்ந்து கதைகளை கூறியது மக்களுக்கு யூபிலி ஆண்டைப் பற்றிய தெளிவு கிடைக்கப் பெரிதும் உதவியது. இறுதியாக சகோதரர் ஜோசப் அவர்களின் நன்றியுரையோடு இப்பயிற்சி இனிதே நிறைவேறியது.

## தீபகற்ப மலேசிய வட்டார மேய்ப்புப்பணி பேரவை 2024 நடந்தேறியது

தீபகற்ப மலேசியா வட்டார மேய்ப்புப் பேரவை 2024-ன் (R P A 2 0 2 4 ) திட்டமிட்டப்படி கடந்த ஆகஸ்டு மாதம் 25,26 மற்றும் 27 ஆகிய தினங்களில், ஜொகூர், பிளந்தோங் மையத்தில் நடைபெற்றது.

இப்பேரவையில் கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ், பேராயர் ஜூலியன் லியாவ், ஆயர் பெர்னர்ட் போல் ஆகியோருடன் அருள்பணியாளர்கள், அருட்கோதர சகோதரிகள் மற்றும் பணிக்குழுக்களைப் பிரதிநிதித்துப் பொதுநிலையினரும் கலந்து கொண்டனர்.

இறுதி நாளில் திருப்பலியோடு இப்பேரவை ஒரு முடிவை எய்தியது. தூய ஆவியாரில் குடும்பம், திருஅவை, சூழலியல் மற்றும் சமூகம் ஆகிய நான்கு துறைகளில் ஆழ்ந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்தடுத்த வாரங் களில் இதன் முழு அறிக்கைகள் வெளி வரும்.

மத்திய பணிக்குழு உறுப்பினர் பேரருட்தந்தை ஜூட் மிராண்டா, அருள்பணி சைமன் லெப்ரோய் மற்றும், அருள்பணி லோரன்ஸ் இங் ஆகியோர் இப்பேரவையை மிகவும் திறம்பட நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருச்சிலுவையின் மாட்சியை அறிந்துணர்வோம்

எதிர்வரும் 14 செப்டம்பர் அன்று, திருஅவையானது திருச்சிலுவையின் மாட்சி என்ற விழாவைக் கொண்டாடுகிறது. ஆண்டுதோறும் செப்டம்பர் திங்கள் 14 ஆம் நாள் கொண்டாடப்படும் இவ்விழா 'திருச்சிலுவையின் மாட்சி', 'திருச்சிலுவை யின் வெற்றி', 'பெருமைமிகு திருச்சிலுவை நாள்', 'உயிர்வழங்கும் அரிய சிலுவை உயர்த்தப்பட்ட நாள்' எனப் பல்வேறு சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகிறது.

இந்த விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில், இவ்விழா நமக்கு உணர்த் தும் செய்தி என்ன என்று சிந்தித்துப் பார்ப்போம்.

### வரலாற்றுப் பின்னணி:

நான்காம் நூற்றாண்டில் உரோமையை ஆண்டு வந்த கான்ஸ்டன்டைன் என்ற மாமன்னரின் அன்னை புனித ஹெலனா, ஒருமுறை புனித பூமிக்குத் திருப்பயணம் மேற்கொண்டபோது அங்கே ஒரு குறிப்பிட்ட இடத்தில் பூமியை அகழ்வதற் குத் தூண்டப்பட்டார். அவ்விடத்தை அகழ்ந்தபோது, மூன்று சிலுவைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அம்மூன்று சிலுவைகளில் இயேசு அறையப்பட்ட சிலுவை எது என்பதைக் கண்டுபிடிக்க, அவர் ஒரு சோதனையை மேற்கொண் டார். அதாவது இறக்கும் தருவாயில் இருந்த ஒரு பெண்ணை அவர் அவ்விடத்திற்குக் கொணர்ந்தார். அப்பெண், முதல் இரு சிலுவைகளைத் தொட்டபோது, அவரிடம் எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை. மாறாக, மூன்றாவது சிலுவையை அவர் தொட்டதும் நலமடைந்தார். ஆதலால், அச்சிலுவையே இயேசு அறையப்பட்ட சிலுவை எனப் புனித ஹெலனா அறிந்துகொண்டார்.

அச்சிலுவையைக் கண்டுபிடித்த இடத்தில், புனித ஹெலனா கல்லறைக் கோயிலை நிறுவினார். இக்கோயில், 335 ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டு, செப்டம்பர் 13, 14 ஆகியத் நாள்களில் அர்ச்சிக்கப்பட்டது. இந்த அர்ச்சிப்பின் நினைவாகத்தான் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் திங்கள் 14 ஆம் நாளன்று திருச்சிலுவையின் மாட்சி என்ற விழா திருஅவையால் கொண்டா டப்படுகிறது. இயேசு அறை யப்பட்ட சிலு வையின் ஒரு பெரிய துண்டு கல்லறைக் கோயிலில் பாதுக்காக்கப்பட்டு வரு கின்றது.

### இவ்விழா உணர்த்தும் செய்தி




பொதுவாக சிலுவைச் சாவானது அல்லது சிலுவையானது மிகவும் இழிவாகக் கருதப் பட்டது. இது கொடியவர்களுக்கும் நாட்டைக் காட்டிக் கொடுத்தவர்களுக் கும்தான் வழங்கப்படும்; ஆனால் அப்படிப் பட்ட சிலுவைச் சாவை ஆண்டவர் இயேசு நம்மீது கொண்ட அன்பினால் மகிழ்வோடு ஏற்றுக்கொள்கிறார்.

"கடவுள் தன்மையில் விளங்கிய அவர், தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று, மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிபவரானார்." ஆம், இயேசு தன்னை வெறுமையாக்கி, அடிமையின் கோலம்கொண்டு, சிலுவைச் சாவை ஏற்றார் என்றால், அது அவர் நம்மீது கொண்ட பேரன்பின் வெளிப்பாடு. தந்தைக் கடவுள் தன் மகனாகிய இயேசுவையே இவ்வுலகிற்கு அளித்தார் என்றால், இயேசு அதனைச் செயல்படுத் தினார். அதனால்தான் கடவுள், ஆண்டவர் இயேசுவை எப்பெயருக்கும் மேலாக உயர்த்துகிறார். நாமும் இறைவனின் திட்டத்தின்படி வாழ்ந்தோம் என்றால் கடவுள் நம்மை மேலும், மேலும் உயர்த்துவார்.

சிலுவை அவமானச் சின்னமல்ல, அது அரியாசனம்; அது வெற்றியின் சின்னம் என்பதையே மனதில் நிலைநிறுத்துவோம். நமக்கு மீட்பைத்தரும் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் அன்பை உணர்ந்து, அவரைப் போன்று இறை வழியில் நடப்போம். இறையருளை நிறை வாகப் பெறுவோம்.

# பாகுபாடும், குறைகளுமற்ற வாழ்வு வாழ்வோம்!

இன்றைய மூன்று வாசகங்களும் நோயுற் றோர் மீது அக்கறைக் கொள்ளும் மனித நேயத்தை விவரிக்கும் காரியங்களை தெளிவுப்படுத்துகின்றது. முதல் வாசகத்தில், அப்போது பார்வையற்றோரின் கண்கள் பார்க்கும் காதுகேளாதோரின் செவிகள் கேட்கும் என வாசிக்கிறோம்

இரண்டாம் வாசகத்தில் பணக்காரன் ஏழை எளியோர் மீது பாகுபாட்டை காண்பிக் காதீர்கள் அனைவரையும் சமமாக நடத்துங் கள் என்கிறது

நற்செய்தியில் காது கேளாதவரும் திக்கிப் பேசுபவருமான ஒருவர் குணமானதைப் பற்றி பேசுகிறார் ஆண்டவர்.

இக்காலத்தில் நம் கண் எதிரே நிகழும் பற்பல அநீதியான செயல்களைக் காண்கிறோம். நமக்கேன் ஊர் வம்பு என்று எண்ணி கண்டும் காணாமல் ஒதுங்கிப் போகிறோம்.

இதுபோன்ற அவலங்களை அடக்கு முறைகளை ஒடுப்பதற்குத்தான் நமது நாகட்டவிழ்க்க வெண்டும் நீதிக்குத் தலை வணங்கி குரல் கொடுக்கும் மக்களாக இருக்க வேண்டும் என இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் நம்மை அழைகிறார்

இயேசுவின் அருங்குறிகள் புறவினத்தார் வாழும் பகுதியில் நடைபெறுகிறது இது இயேசுவுக்கு அவர்கள் மீதிருந்த அன்பையும் அக்கறையும் காட்டுகிறது இயேசு ஊனமுற்ற மானிடனைத் தொட்டும் தம் உமிழ் நீரால் அவனின் நாவைத் தொட்டும் திறக்கப்படு என சொல்லவே அம்மனிதன் குணமாகின்றான்.

அது மாத்திரமல்ல மேலும் இயேசுவின் அருங்குறியில் ஒரு தெய்வீகத்தை அவர்கள் கண்டு உணருகிறார்கள். அதனால் இதை எவருக்கும் சொல்ல வேண்டாமென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். ஆயினும் தீபரவுவது போல இந்நற்செய்தி நாலாபக்கமும் பரவியது அவர் கட்டளையை மீறி இன்னும் மிகுதியாக எங்கும் அறிவித்தனர். இவர் எத்துணை நன்றாக யாவற்றையும் செய்து வருகிறார் என எங்கும் புகழ்ந்துரைத்தனர்

இன்று நம்மில் பலர் எதையும் தொடாத வர்களாக உணர்வற்றவர்களாக உறவுகள் அற்றவர்களாக இருக்கிறோம். பிறரின் வறுமையோ, தேவையோ துன்பத் துயரங் களோ நம்மைத் தொடுவதில்லை சமுதாயத்தில் கட்டப்பட்டவர்கள் அடை பட்டவர்கள் ஒடுக்கப்பட்டவர்கள் நீதி நிலைக்க நாம் பாடும்படும்போது தான் சமுதாயத்தை தொடுகிறோம்

எனவே நம்மத்தியில் ஊனமுற்றோர், காது கேளாதோர், பேசமுடியாதோர், திக்கிப் பேசுவோர், மாற்றுத்திறனாளிகள் என இன்னும் உடலில் பாதிப்படைந்தவர்களை அன்புடன் நடத்துவோம். ஆதரவு கொடுப்போம். அக்கறை கொண்டு அவர்களின் தேவைகளைப் பூர்த்திச் செய்யும் சீடர்களாக சாட்சியம் பகர்வோம்.

ஆம், இன்று போல் இயேசு என்றும் நம் ஒவ்வொருவரையும் திருமுழுக்குச் சடங்கில் உரைத்ததுபோல், கடவுளின் வார்த்தையைக் காதால் கேட்கவும் அந்த நம்பிக்கையை நாவால் அறிக்கைவிடவும் அவரே செய்தருள் வாராக என செபித்து அருள்பணியாளர் காதையும் உதட்டையும் தொடுகிறார். குழந்தைப் பருவத்திலிருந்தே இறைவனைப் பற்றிக் கேட்கவோ, பேசவோ தயங்கக் கூடாது. நம் சீடத்துவ வாழ்வில் இயேசுவின் போதனையைக் கேட்பதிலும் எடுத்துரைப் பதிலும் தயக்கம் இருத்தல் கூடாது என்பதை மனதில் நிறுத்தி நம்பிக்கை வாழ்வில் முன்னேறிச் செல்வோம்.

*-ஆ.வி. டேவிட், குளுவாங்*

### பொதுக்காலம்-23-ஆம் ஞாயிறு

| | |
|---|---|
| முதல் வாசகம்: | எசா 35:4-7அ; |
| திரு.பாடல் | 146: 7. 8-9a. 9bc-10 |
| 2-ம் வாசகம் | யாக் 2:1-5 |
| மாற்கு | மாற்கு 7:31-37 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**

**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**

**திருப்புகழ் மாலை- வாரம் 3**